கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். My help comes from the LORD

Praise the Lord:

Let us pray. ..

16 வருடங்களை நமது திருச்சபை கடந்து செல்லவும்,
இந்த திருச்சபையிலே நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வருடங்களை கடந்து செல்லவும், கர்த்தர் கிருபை செய்துள்ளார். ஆமென்.
நமக்கும் கர்த்தருக்கும் இடையிலே தெய்வீக உறவு வளர வளர,
கர்த்தர் என்றைக்கும் நம்மைக் காக்க வல்லவர் என்கிற நம்பிக்கையும் வளர்ந்துகொண்டேயிருக்கிறது.
அப்படி வளர்ந்துவருகிற நாம்….
ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். என்ற வசனத்தின்படியே நாம் கர்த்தரிடம் மன்றாட ஆயத்தப்படுவோம்.
*கர்த்தருடைய வசனத்தை வாசித்து தியானிக்கும்போது, அது நம்மை ஆயத்தப்படுத்தும். ஆமென்.*
வசனங்கள் நமக்கு பொறுமையையும், ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுத்து நம்மை ஆயத்தப்படுத்தும்.

"தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்தவருக்கு, இரங்கி நீதிமானாக்கிய கர்த்தர், நம்மையும் அவருடைய கிருபையினாலே நீதிமானாக்கிவிட்டார்.
பிறகு ஏன் நமக்கு கவலை????

நம் அனைவருக்கும் ஏதோ ஒரு விதத்திலே பலவீனங்கள் என்றைக்கும் உள்ளதுதான்.
அந்த பெலவீனங்களை நீக்கி நமக்கு ஒத்தாசை செய்ய கர்த்தர் இருக்கிறார்.
அவர் நமக்குள்ளே வாசம் செய்கிறார் என்ற விசுவாசத்திலே வளர்வோமாக. ஆமென்.

சங்கீதம்/ Psalm 121 (பக்கம் 751)

1. எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.
2. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.
3. உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.
4. இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.
5. கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.
6. பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.
7. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.
8. கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

1 I lift up my eyes to the hills—where does my help come from?
2 My help comes from the LORD, the Maker of heaven and earth.
3 He will not let your foot slip— he who watches over you will not slumber;
4 indeed, he who watches over Israel will neither slumber nor sleep.
5 The LORD watches over you— the LORD is your shade at your right hand;
6 the sun will not harm you by day, nor the moon by night.
7 The LORD will keep you from all harm— he will watch over your life;
8 the LORD will watch over your coming and going both now and forevermore. (NIV)

முதலாவது வசனம் ஆங்கிலத்திலே "எங்கிருந்து எனக்கு ஒத்தாசை வரும்?" என்று கேள்வியாகவும் 2ம் வசனம் கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். என்ற பதிலாகவும் உள்ளது.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.
இந்த வசனத்திலே ஒத்தாசை என்ற வார்த்தை ஆங்கிலத்திலே help என்றுள்ளது.
Help என்ற வார்த்தைக்கு ஒத்தாசை என்று இந்த வசனத்திலே மொழிபெயர்க்கபட்டுள்ளது. இதே Help என்ற வார்த்தை உதவி என்றும் சகாயம் என்றும் துணை என்றும் வேறு சில வார்த்தைகளாலும் வேறு வசனங்களிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

*(Ref: Tamil Dictionary:)*

உதவி: 1. ஒருவர் நன்மை அடையும்படியான செயல். ஒத்தாசை. Help, Assistance
2. (ஒரு பொருளின்) துணை, பயன். Aid, help.
3. பொருளட ரீதியான ஒத்துழைப்பு. Assistance, Funding.

சகாயம்: 1. உதவி, உபகாரம். Help, Aid, Support 2. மலிவு. Cheapness, Inexpensiveness.

**ஒத்தாசை**: (ஒருவருடைய வேலையின் சிரமத்தைக் குறைப்பதற்குச் செய்யும்) உதவி. Help, Assistance

ஒத்தாசை ....நாம் செய்யக்கூடிய வேலையின் சிரமத்தை குறைப்பதற்கு உதவி.
நாம் கர்த்தருக்காக ஏதாவது செய்ய விருப்பப்படும்போது, அதிலே வரும் சிரமத்தைக் குறைத்து கர்த்தர் நமக்கு உதவிசெய்து, நம்மை உற்சாகப்படுத்துவார். ஆமென்.

வசனம 1-2ஐ கவனியுங்கள். எனக்கு என்று உள்ளது.
வசனம் 3,5-8ஐ கவனியுங்கள். உனக்கு என்றுள்ளது.
எனக்கு ஒத்தாசை செய்கிற கர்த்தர், உங்களை என்றென்றும் காப்பார்.

சங்கீதம்/ Psalm 121:2,8

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.
கர்த்தர் உங்கள் போக்கையும் உங்கள்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

நாம் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்பொழுது, நாம் மற்றவர்களுக்காக உதவிசெய்ய வாஞ்சிக்கும்பொழுது, கர்த்தர் நம்மோடு கூட இருந்து, நமக்கு ஒத்தாசை செய்து நம் வாஞ்சையை நிறைவேற்றுவார்.

இவ்வளவு அருமையாக நமக்கு ஒத்தாசை செய்யும் கர்த்தர்...சொல்கிறார்:
நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். (பிலி. 4:6)

இவ்வளவு வசனங்களையும் தியானித்துவிட்டு, நாம் கவலை கொண்டோமானால்......
என்ன சொல்வது?
எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? (எரே. 17:9)

**கர்த்தராகிய நானே** ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, **இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்**. (எரே. 17:10
என்கிறது வசனம்

*வேதத்திலே கேள்வியும் உண்டு. அதற்கு பதிலும் உண்டு.*

கர்த்தருடைய வேதம் **குறைவற்ற**தும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. (**சங் 19:7)**
அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், **தேனி**லும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளி**தேனி**லும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. (**சங் 19:10)**

"எங்கிருந்து எனக்கு ஒத்தாசை வரும்?" என்று கேள்வியும்
கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். என்ற பதிலும் இந்த சங்கீதம் 121லே உள்ளது.
கர்த்தர் கொடுத்துள்ள இந்த பதில் நம் இருதயத்திலே நாளுக்கு நாள் வளருமானால், நாம் தைரியமாக கர்த்தரை நோக்கி எப்பொழுதும் ஜெபிக்கலாம், இடைவிடாமல் ஜெபிக்கலாம், சோர்ந்துபோகாமல் ஜெபிக்கலாம்., விசுவாசத்தோடு ஜெபிக்கலாம். ஆமென்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.
என்று அறிந்தவர்கள் நாம். ஒத்தாசை பெற அவருடைய கிருபையினாலே தகுதிபெற்றவர்கள் நாம்.

நமது பெலவீனம், நமது கவலைகள், நமது பாவங்கள், நமது மீறுதல்கள், நமது கஷ்டங்கள்....
ஒன்றையுங்குறித்து இப்பொழுது கவலைப்படாதீர்கள்......
கர்த்தரை நோக்கி நாம் மன்றாடும்பொழுது, கர்த்தரிடத்திலிருந்து நமக்கு ஒத்தாசை வரும்.

சங்கீதம்/ Psalm 121: 4

4. இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.
நாம் சில சமயம் உறங்குவதுமுண்டு தூங்குவதுமுண்டு.
சிலசமயத்தில், நம் மாம்சம் விழித்திருந்து ஆவி உறங்கும். அதனால்தானோ என்னவோ...
நம் வாயின் வார்த்தைகள் ஆவியின் அர்த்தமற்றதாக சிலசமயம் இருக்கும்.
சிலசமயம் அர்த்தமுள்ளதாக இருக்கும்.
நாம் முன்பு சொன்னதற்கும் பின்பு சொல்வதற்கும் வேறுபாடு இருக்கும்.

கர்த்தருடைய வார்த்தை நித்திய நீதி. நேற்றும் இன்றும் என்றும் மாறாதது.
உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்; என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன். (சங்கீதம் 119:144)

எபிரெயர்/ Hebrews 4:15-16 (பக்கம் 301)

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.
16. ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபி. 4:15-16)

For we do not have a high priest who is unable to sympathize with our weaknesses, but we have one who has been tempted in every way, just as we are—yet was without sin. [16]Let us then approach the throne of grace with confidence, so that we may receive mercy and find grace to help us in our time of need.

நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தகுதி பெற்றவர்கள். *(சகாயம் என்ற வார்த்தையும் ஆங்கிலத்தில் Help என்றே உள்ளது.)*

சங்கீதம்/ Psalm 121: 7

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.
இம்மைக்குமட்டுமல்ல.... மறுமையிலும் நம்மைக் காக்கிறவர்.
என்றைக்குங் காப்பார்.
இனி நமக்கு கவலை இல்லை, பயம் இல்லை.
இந்த ஜீவனுள்ள வசனங்கள் நம்மிலே வளரவேண்டும.
*கிறிஸ்துவுக்குள் வாழ்வதற்கும், கிறிஸ்துவுக்குள் வளர்வதற்கும் வித்தியாசம் உள்ளது.*

கிறிஸ்துவாக இருக்கும் வார்த்தை ஜீவனுள்ளது. அந்த ஜீவனுள்ள வார்த்தை.... நமக்குள்ளே எப்படி வந்ததோ அப்படியே இருந்தால், நாம் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறோம்.

இந்த ஜீவனுள்ள வசனம், நமக்குள்ளே 30, 60, 100 ஆக வளருகின்றபோது, நாம் கிறிஸ்துவுக்குள் வளர்கிறோம்.

ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது **நாளுக்கு**நாள் புதிதாக்கப்படுகிறது. **(2கொரி 4:16)**

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.
கர்த்தர் உங்கள் போக்கையும் உங்கள்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.
என்ற வசனங்கள் நமக்குள்ளே நாளுக்குநாள் வளரும் என்று சொன்னால்,
நம்மைப்போல உள்ள நம்முடைய சகோதர சகோதரிகளின் பெலவீனங்கள் நம்மை ஒருபோதும் சோர்வடையச்செய்யாது. நாம் அவர்களுக்காக வேண்டும்பொழுது, கர்த்தர் நமக்கு ஒத்தாசை செய்து, நம்மை பெலப்படத்துவதோடு நாம் வேண்டுகிறவர்கள் கால்களையும் தள்ளாடவொட்டாமல் பெலப்படுத்துவார். அப்பொழுது நமக்கிடையிலே ஒருமனம் அதிகரிக்கும். இந்த ஒருமனத்தோடு மேலும் நாம் ஜெபிக்கும் பொழுது, மேலும் கர்த்தரின் ஒத்தாசை அதிகரிக்கும். அதிகரித்துக் கொண்டேயிருக்கும். குறையவே குறையாது. ஆமென்.
இப்படி நாம் கர்த்தருக்குள் வளர, கர்த்தரே உதவி செய்வார். ஒத்தாசை செய்வார். ஆமென்.

**ஒத்தாசை**: (ஒருவருடைய வேலையின் சிரமத்தைக் குறைப்பதற்குச் செய்யும்) உதவி.

இதை இன்னொரு விதமாக தியானியுங்கள்.....

ஒத்தாசை....ஒத்த ஆசை *(ஒத்த வேஷம்...என்ற வார்த்தையைப் போல) என தியானித்துப் பாருங்கள்....*

*ஒருவர் உங்களுக்கு உதவி (ஒத்தாசை) செய்யும்பொழுது, அந்த வேலை அவருக்கும் பிரியமாக இருந்தால் அவர் உங்களுக்கு உற்சாகத்தோடு உதவி செய்வார்.*
*இருவருக்கும் ஒத்த ஆசை இருந்தால், ஒத்தாசை தானாக வரும். ஆமென்.*

*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் கிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. என்று வசனம் சொல்கிறது.*

*அநத தேவனுடைய பிரியப்படியே நாம் மற்றவர்களின் இரட்சிப்புக்கு ஜெபித்து பிரயாசப்படும்பொழுது..... தேவன் நம்மோடு சேர்ந்து நமக்கு ஒத்தாசை செய்வார். நம் ஜெபத்துக்கு பதில் தருவார்.*

*வியாதியோடும் வேதனையோடும் இயேசு கிறிஸ்துவிடம் வந்த யாவரையும் அவர் குணமாக்கினார்.*
அப்படி குணப்படுத்துவது அவருக்குப் பிரியமாக இருந்தது.
*வியாதியோடும் வேதனையோடும் உள்ளவர்களுக்காக நீங்கள் ஜெபிக்கும்பொழுது, குணப்படுத்தப் பிரியமும் வல்லமையும் உள்ள நேற்றும் இன்றும் என்றும் மாறாத நம் கிறிஸ்து இயேசு நம்மோடு சேர்ந்து, நமக்கு ஒத்தாசை செய்து, அவர்களை குணப்படுத்துவார். ஆமென்.*

இப்பொழுது நீங்கள் ஜெபிக்க ஆயத்தமா?

ஏசாயா/Isaiah 40:28-29 (பக்கம் 845)
பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்துமுடியாதது.
சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.

*அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை;*

ஏசாயா/Isaiah 40:31
கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

*கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ…இளைப்படையார்கள்,…சோர்ந்துபோகார்கள்..*

(வசனம் 28யும் 31யும் கவனியுங்கள்….)
கர்த்தர் நமக்கு ஒத்தாசை செய்யும்பொழுது, கர்த்தரின் பெலன் நம்மை பெலப்படுத்தும். ஆமென்.

சங்கீதம்/ Psalm 121:2,8
வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.
கர்த்தர் உங்கள் போக்கையும் உங்கள்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

*நாம் ஒவ்வொருவருக்குள்ளும் இந்த ஜீவனுள்ள வசனம்*
*ஒவ்வொரு நாளும் ஜீவித்து, வளர்ந்து, பெருக .கர்த்தர் கிருபை செய்வாராக. ஆமென்.*

நமக்கு ஒத்தாசை செய்பவரை நோக்கிப் பார்த்து ஜெபிக்க தயவுசெய்து எழுந்து நிற்போம்.
நமது கண்கள் மற்றவர்களை நோக்காது, …..நம்மையேகூட நோக்காது இருக்க,
கண்களை மூடியபடி நீங்கள் ஜெபிக்கும்போது,
உங்கள் ஆவிக்குரிய கண்கள் கர்த்தரை நோக்கியிருக்க எந்த தடங்களும் உங்களுக்கு வராது.
வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து நமக்கு ஒத்தாசை வரும்.
கர்த்தர் நம் போக்கையும் நம் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.
நம்மை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் நம் ஆத்துமாவைக் காப்பார்.
ஆமென்.

## Let us pray. ..

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.